# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2329/44 - 2023 අප්‍රේල් මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.04.27

*2329/44 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

*2022, யூலை மாதம் 22 ஆம் திகதிய 2289/43 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு இடைக்கிடை திருத்தப்பட்ட அறிவித்தல் ஊடாக, கௌரவ சனாதிபதியவர்களால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் அலுவல்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அமுல்படுத்த வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் என்பவற்றில் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகள் மற்றும் அலுவல்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அமுல்படுத்த வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் ஆகியவற்றை அரசியலமைப்பின் 45 (5) ஆவது உறுப்புரை ஊடாக என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கிணங்க 2023.04.28 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கௌரவ உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்களுக்கு ஒப்படைப்பதாக இத்தால் அறியத் தருகின்றேன்.*

**கலாநிதி ஏ. டீ. சுசில் பிரேமஜயந்த,**
*கல்வி அமைச்சர்.*

*2023, ஏப்பிறல் மாதம் 25ஆம் திகதி.*

**அட்டவணை**

| *I ஆவது நிரல்* | *II ஆவது நிரல்* | *III ஆவது நிரல்* |
|---|---|---|
| *அலுவல்கள் மற்றும் கடமைகள்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *அமுல்படுத்த வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
| 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிர்வாகத்திற்குட்பட்ட அரச பல்கலைக்கழகங்களையும் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி செய்தல்.<br><br>2. இலங்கையில் உயர் கல்வியின் தர மதிப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் சர்வதேச கல்வி நிறுவகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களுடன் இணைந்து செயற்படல் மற்றும் ஒத்துழைப்பை விருத்தி செய்தல்<br><br>3. உயர் கல்விக்கான பிரவேச வழிகளை விரிவுபடுத்துவதற்குப் பொருத்தமான தேர்வளவுகளை இனங்கண்டுகொள்ளல் மற்றும் அமுல்படுத்தல்.<br><br>4. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தைகளை இலக்காகக் கொண்டு பட்டதாரிகளை உருவாக்குவதற்காக ஒட்டுமொத்த கல்வி மறுசீரமைப்புக் கொள்கைக்கமைய பாட விதானங்களைத் திருத்தியமைத்தல்<br><br>5. பல்கலைக்கழகக் கல்வியில் ஆராய்ச்சிகள் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தல்<br><br>6. நேர்த்தியான (ஸ்மார்ட் கல்வி பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br><br>7. அனைத்து அரச பல்கலைக்கழகங்களையும் சர்வதேச தரப்படுத்தல்களின் உயர் மட்டத்திற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் | 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு<br><br>2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் காணப்படும் அனைத்து அரச பல்கலைக்கழகங்கள், பட்டப்பின் படிப்பு நிறுவகங்கள் மற்றும் ஏனைய நிறுவகங்கள்<br><br>3. புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகம்<br><br>4. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்<br><br>5. இலங்கை உயர் கல்வி தொழில்நுட்ப நிறுவகம் | • பல்கலைக்கழகங்கள் சட்டம் (1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கம்)<br><br>• புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகச் சட்டம் (1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கம்)<br><br>• இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகச் சட்டம் 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்கம்)<br><br>• இலங்கை உயர் கல்வி தொழில் நுட்ப நிறுவகச் சட்டம் (1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கம்) |

| *I ஆவது நிரல்* | *II ஆவது நிரல்* | *III ஆவது நிரல்* |
|---|---|---|
| *அலுவல்கள் மற்றும் கடமைகள்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *அமுல்படுத்த வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்* |
| 8. இலங்கையின் தகைமை பெற்ற மாணவர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களில் பிரவேசிப்பதற்கு முடியுமான வகையில் புலமைப்பரிசில் திட்டங்களை அமுல்படுத்தல்<br><br>9. இலங்கையில் செயற்படும் தனியார் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் அங்கீகாரம் வழங்குதல்<br><br>10. பௌத்த மற்றும் பாளி கல்வியை மேம்படுத்தல் மற்றும் பிக்குமார் களின் உயர்கல்வி நடவடிக்கை களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தல்<br><br>11. II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட் டுள்ள ஏனைய அனைத்து விடயங்களுடன் தொடர்பான நடவடிக்கைகள்<br><br>12. II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல். | | |

EOG 04-0193